# மக்கள் மறுவாழ்வு

மக்கள் மறுவாழ்வு
சந்தா விபரம்
ஆண்டுசந்தா ரூ.10
தனிப்பிரதி 75 காசு

மலர்: 2 ∵ ஜூன் 1984 ∵ விலை 75 காசு ∵ இதழ்: 10


## கோப்புகள், கடவுச்சீட்டுகள் இல்லை என்றால் உதவி பெற

# வேறு வழி இல்லையா?

**மறுவாழ்வு திட்டத்தின் மூலம் கடனுதவி மற்றும் மறுவாழ்வு உதவிகள் கோரி விண்ணப்பித்தவர்கள் பல வருடங்கள் காத்திருந்தும், ‘கோப்பு’கள் இல்லை பாஸ்போர்ட்கள் இல்லை, குடும்ப அட்டைகள் இல்லை என்று கூறி மனுக்கள் நிராகரிக்கப்பட்டு பலர் உதவிகள் எதுவும் பெற முடியாதவர்களாக அவதிப்படுகிறார்கள். இப்படித்தவிப்பவர்களுக்கு மாற்று வழி ஏதும் இல்லையா? வேறு வழி மூலம் இந்த உதவிகள் கிடைக்க அரசு ஆவன செய்யக்கூடாதா? என்று ‘மக்கள் மறுவாழ்வு’ மூலம் பலர் கேட்கின்றனர்.**

சிறிமாவோ—சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையிலிருந்து 1968லிருந்து 4 லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் குடிப்பெயர்ந்து வந்திருக்கிறார்கள். இவர்களுக்கு மறுவாழ்வுத் திட்டத்தின் மூலம் பல உதவிகள் அளிக்கப்படுகின்றன.

குடிப்பெயர்ந்தோர் தமக்குரிய உதவிகளை பெற சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு மனு செய்கிறார்கள். ஆனால் காலக் கிரமத்தில் இவ்வுதவிகள் கிடைப்பதில்லை. பலர் பல ஆண்டுகளாக காத்திருக்கிறார்கள்.

இதற்காக ஒரு வருடத்தில் மனு செய்துக் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட காலத்தில் அவ்வுதவிகளை பெற்றுக் கொள்ளவேண்டும் 5 ஆண்டுகள் போனால் ‘தாயகம் திரும்பியோர்’ என்ற பட்டியலிலும் இருக்கத் தகுதியற்றவர்களாகி விடுவர்.

இருந்தும் இந்த காலக்கெடுவையும் தாண்டி எந்த உதவியும் பெறாதவர்களாக பலபேர் இருக்கிறார்கள்,

மனு செய்தும், விசாரணை முடிந்து தமது பாஸ்போர்ட், குடும்ப அட்டை அனைத்தும் ஒப்படைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் உதவி கிடைக்காமல் காத்திருப்பவர்கள் இருக்கிறார்கள்.

ஆனால், உதவி சம்பந்தமாக சம்பந்தப்பட்ட மறுவாழ்வு அலுவலர்களை அணுகும்போது கோப்புகள் இல்லை; பாஸ்போர்ட் இல்லை. குடும்ப அட்டை இல்லை என்று காரணம் காட்டுகிறார்கள், மேற்படி ஆவணங்களுடன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்

ஏற்கனவே மனு கொடுத்து விசாரணை முடிந்து இந்த ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டுவிட்டன என்று குறிப்பிட்டாலும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

இந்த நிலையில் ஏற்கனவே மனுசெய்து விசாரணை முடித்துவைக்கப்பட்ட கோப்புகளுக்கு என்ன ஆயின? அவர்கள் ஒப்படைத்த மேற்படி பாஸ்போர்ட், குடும்ப அட்டை என்ன ஆயின?

இதனால் மனுசெய்தவர்கள் நிலை என்ன? எத்தனை வருடங்களாக மறுவாழ்வு உதவிக்காக காத்திருப்பது? எத்தனை காலத்திற்கு இந்த உதவிக்காக சம்பந்தப்பட்ட அலுவலகத்தோடு தொடர்பு கொள்வது—அலைந்து அலைந்து ஏமாறுவது? மேற்படி கோப்புகள், பாஸ்போர்ட்டுகள் குடும்ப அட்டைகள் இல்லை இல்லை என்ற பதிலையே கேட்டு சலிப்பது?

எங்களுக்கு உதவிகள் கிடைக்க வழியே இல்லையா? கோப்புகள் இல்லை என்றால், பாஸ்போர்ட் இல்லை என்றால், குடும்ப அட்டை இல்லை என்றால் எங்கள் பிரச்சனைக் குறித்து தகுந்த நடவடிக்கை எடுத்து உரிய உதவிகள் உடன் கிடைக்க அரசும், சம்பந்தப்பட்ட மறுவாழ்வு துறையும் வழி செய்யமாட்டார்களா என்று கேட்கின்றனர். ○


### அடுத்த இதழில்

குடிப்பெயர்ந்து
வந்த
இளைஞர்களுக்கு
சில
அறிவுரைகள்

மக்கள் மறுவாழ்வு

மலர்: 2] ஜூன் '84 [இதழ்: 10

## பரிந்துரைக்கப்பட்ட உதவிகள்

சிறிமாவோ சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையிருந்து குடிபெயரும் இந்திய வம்சாவளியினருக்கு அவர்கள் இந்தியா வந்ததும் இந்திய அரசு அளிக்கும் உதவிகள் குறித்து விரிவாகவே கூறுவதுடன் இலங்கையிலுள்ள இந்திய தூதரக மறுவாழ்வு அலுவலகத்தில் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் குடும்ப அட்டைகளில் அவர்கள் இங்கு வந்து பெற்றுக் கொள்ளக்கூடிய உதவிகள் - அரசு, தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு, விவசாய உதவி வியாபாரக் கடன் உதவி வீடுகட்டும்கடன் போன்றவற்றில் அவர்கள் விரும்பும் அல்லது அவர்களுக்குத் தகுதியான உதவிகள்-குறிப்பிடப்படுவதுடன் அவ்வாறு குறிப்பிடப் உதவி இங்கு வந்ததும் கிடைக்கும் எனவும் உறுதி அளிக்கின்றனர்.

ஆனால் இங்கு வந்ததும் நிலைமை வேறு விதமாக உள்ளது. இங்கு வந்ததும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவர்களது குடும்ப அட்டையில் குறிப்பிட்டுள்ள உதவிகளையிட்டு சிறிதும் அக்கரை கொள்வதில்லை. இங்கு இவ்வதிகாரிகள் குடிபெயர்ந்தோரின் குடும்ப அட்டையில் உள்ள உதவிகள் பற்றிய குறிப்பையோ அல்லது குடிபெயர்ந்தோரின் விருப்பத்தையோ கருத்தில் கொள்ளாது தாம் விரும்பியபடி ஏதாவதொரு உதவிக்கு அல்லது வேலைக்குப் பரிந்துரைக்கின்றனர்.

இவ்வாறு இலங்கையிலுள்ள இந்திய தூதுவரகத்தின் மறுவாழ்வு அலுவலகத்தின் குறிப்பிட்ட உதவிகள் தமக்கு கிடைக்கும் என நினைத்து இங்கு வந்த குடிபெயர்ந்தோர் இங்குள்ள அதிகாரிகள் வேறு வேலை அல்லது உதவிக்கு சிபார்சு செய்வதால் மிகவும் ஏமாற்றமடைகின்றனர். அத்துடன் இவர்கள் இவ்வாறு தமக்கு முற்றிலும் புதிதான இடங்களில் வேலையில் அமர்த்தப்படுவதாலும், இவர்களுக்கென புதிதாக ஆளரவமற்ற காடுகளில் - உருவாக்கப்படும் காலனிகளில் குடியமர்த்தப்படுவதால் இப்பகுதியைப் பற்றிச் சிறிது அறியாத இவர்கள் என்ன செய்வதெனத் தெரியாது மிகுந்த சிரமத்துக்கும் உள்ளாகின்றனர்

இவ்வாறான சிரமங்களைத் தவிர்க்க இலங்கையிலுள்ள இந்திய தூதரக மறுவாழ்வு அலுவலகத்தினர் இங்குள்ள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு குடிபெயர்ந்தோருக்கான உதவிகள் குறித்து சரியாக தீர்மானிப்பதுடன், குடிபெயர்வோரின் குடும்ப அட்டையில் குறிப்பிடப்படும் உதவிகளையே அவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பின் குடிபெயர்ந்தோர்க்கேற்படும் பல இன்னல்களைத் தவிர்க்கலாம். O

# ஆண்டுகள் பத்து ஆகியும் அகதிகள் என்ற நாமம் தான்?

டி. கே. ஜெகநாதன்

சிவகங்கை திருப்பத்தூர் சாலையில் சிவகங்கையிலிருந்து சுமார் பத்து கிலோ மீட்டர் தொலைவில் அண்ணா காலனி அமைந்துள்ளது. இக் காலனி உருவாகி பத்தாண்டுகளுக்கு மேலாகியும். இன்னமும் "அகதிகள்" என்ற இழிவான எண்ணமும், பாதுகாப் பற்ற பரிதாப நிலையுமே நீடித்து வருகின்றது.

கடந்த 20-4-84 அன்று இரவு சில சிறுவர்கள் துடுக்குத்தனமாக, இக் காலனி வழியாக ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸின் மீது கல்லெறிந்துள்ளனர் இதற்கு இச் சிறுவர்கள் கூறும் காரணம், அகதிகள் காலனி தானே என்ற அலட்சியப் போக்கில், பல 'பஸ்' கள் இக்காலனியில் நிறுத்தப்படுவதே இல்லையாம்.

பஸ் கண்டக்டரும், டிரைவரும் காட்டு மிராண்டித்தனமாக, இக்காலனியைச் சேர்ந்த குற்றமற்ற ஓர் அப்பாவி இளைஞனை கடத்திச் சென்று போலிஸில் ஒப்படைத்துள்ளனர்,

எவ்வித விசாரணையும் இல்லாமல் அகதிகள் கேட்பாரற்ற நாதிகள் என்ற இழிவானஎண்ணத்தில், போலிஸார் இளைஞனின் கைக்கடிகாரம் நொறுங்கும் அளவு மிருகத்தனமாக தாக்கியத்தோடு 'உதைப்பட்டு வரும் அகதிகளுக்கு இவ்வளவு திமிரா?' என தரக்குறைவான வார்த்தைகளில் திட்டி இரவு முழுவதும் பொலிஸ் காவலில் வைத்து துன்புறுத்தியுள்ளனர்

இளைஞன் தான் நிரபராதியென எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் காதில் போட்டுக் கொள்ளாமல் கேலியும், கிண்டலும் பேசி திரும்ப, திரும்ப அடித்துள்ளனர்

மேற்படி தாயகம் திரும்பிய இளைஞர் உள்ளூர் தபால் அலுவலகத்தில் பகுதி நேர ஊழியராகவும், காலனியில் முதியோர் பள்ளி ஊழியராகவும் பணி புரிகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் தான் அவல நிலை என்றால் இங்கேயும் நாம் இரண்டாந்தர பிரஜைகளாக நடத்தப்படுவதால் இக்காலனி மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

தமது அடிப்படை உரிமைகள் பறி போவதையும் இதற்கு காரணம் தம்மிடம் ஒற்றுமை இன்மையும், பக்கத்து ஊர்காரர்களின் தூண்டுதலினால் ஏற்பட்டுள்ள சாதி வெறி, கட்சி வெறியே என்பதையும் உணர்ந்து விட்ட இக்காலனி இளைஞர்கள் 'இலங்கையர் நல உரிமைச் சங்கம்'' என்ற பெயரில் தமக்கென ஒரு பாதுகாப்பை-அமைப்பை ஏற்படுத்தும் துரித முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதன் ஓர் அங்கமாக இளைஞர் மறுமலர்ச்சி மன்றம் என்ற சமூக நல அமைப்பையும் ஏற்படுத்தி வருகின்றனர். O

## தொடர்பு கொள்ள...

மக்கள் மறுவாழ்வு

அனைத்து தொடர்புகளுக்கும் பின்வரும் முகவரிக்கு எழுதவும்.

**மக்கள் மறுவாழ்வு**
1, தெற்கு கங்கையம்மன்
கோவில் 2வது தெரு
சென்னை-600094

# மறுவாழ்வு அதிகாரிகள் கொடுத்த வாக்குறுதி எங்கே?

நான், எனது மனைவி, 8 குழந்தைகள், தகப்பனார் ஆகியோருடன் சிரிமாசாஸ்திரி (இந்திய – இலங்கை) உடன் படிக்கையின் கீழ் 1974ம் ஆண்டின் இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து வந்தேன்.

இலங்கையிலுள்ளமறுவாழ்வு அமைப்பு அதிகாரிகள் எனக்கு வீடு மற்றும் தொழில் வசதிகளுக்கும் சிபார்சு செய்திருக்கிருர்கள். குடும்ப அட்டையின் இலக்கம் கே 066 08 ஆகும். திருச்சியிலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சிபார்சின் பேரில் சென்னையில் குடிபெயர்ந்தோர் கூட்டுறவு வங்கி கிழக்குத் தாம்பரம் வேளச்சேரி தெருவில் உள்ள பிரிசிஸன் எலக்ட்ரோ டிவைஸஸ் நிருவனத்தில் என்னை வேலைக்கு அமர்த்தியது. 15 7.1979ல் எனக்கு வேலை கிடைத்தது. நிறுவனத்திற்கு சொந்தமாக இடத்திலேயே குடியிருப்புக்கும் ஒழுங்கு செய்யப்பட்டது.

இந்நிறுவனத்தில் சுமார் 8 ஆண்டுகள் வேலை செய்தேன். தொழில் நிரந்தரமாக்கப்படவில்லை. இ.எஸ் ஐ இல்லை. மாதச் சம்பளமாக ரு 245. மட்டுமே கொடுக்கப்பட்டது.

ரு. "45-ல் குடும்பம் நடத்த முடியாமல் குடும்பத்தில் அனைவரும் பல சிரமங்களுக்கு ஆளாளேம்

இந்த நிலையில் நிர்வாகம் என்னை 9 1-82ல் எவ்வித மூன் அறிவிப்பு மின்றி திடீரென வேலை நீக்கம் செய்து விட்டது. இச்சந்தர்ப்பத்தில் என் மனைவி குழந்தையொன்று பிரவசித்திருந்தாள். என்ருலும் நிர்வாகம் கருணைகாட்டவியலை எனது வீட்டுத் தட்டுமுட்டுச் சாமான்களையும் கைப்பற்றிக் கொண்டு என்னையும் என் குடும்பத்தினர் அனைவரையும் தெருவிலே தள்ளிவிட்டனர்

நான் தவறு ஏதும் செய்யவில்லை. எனது தொழிலை நிரந்தரமாக்கி உரிய சலுகைகளைப் பெற்றுத் தரும்படி தொழில் அமைச்சர், மறுவாழ்வுஅளிப்பு இயக்குனர், அகதிகள் கூட்டுறவு வங்கி ஆகிய அதிகாரிகளுக்கு மனுச் செய்தேன்.

இதை ஓர் தவருக கருதியே நிர்வாகம் என்னைப் பலி வாங்கி விட்டது. தொழில் இன்றி வீடின்றி உணவின்றிஒரு அகதிக்கு இங்கு என்ன செய்ய முடியும் ? எனது மனைவி பிரசவித்த குழந்தை இறந்து விட்டது. எனதுதந்தையும் இறந்து போஞர் குடும்பத்தில் மற்றவர்களும் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிரும்.




அகதிகள் கூட்டுறவு வங்கிக்கு மனுப் போட்டேன். மறுவாழ்வளிப்பு இயக்குனருக்கும் எழுதினேன் தொழில் அமைச்சருக்கும் அறிவித்தேன். முடிவில்லை. கடைசியாக எனது நிலைமையை விளக்கி நிவராணம் கேட்டு முதல் அமைச்சருக்கு 17-1-82ல் மனுச் செய்தேன். எந்த நிவாரணமும் இதுவரை கிடைக்கவில்லை. கருணையுள்ள ஒருவர் எனக்கும் எனது குடும்பத்திற்கும் கால் வயிற்று கஞ்சி ஊற்றி வருகிருர்

இலங்கையில் உள்ள இந்திய மறுவாழ்வளிப்பு அதிகாரிகள் எனக்கு கொடுத்த உறுதி மொழிகள் எங்கே?

அகதிகள் கூட்டுறவு வங்கி இப்பிரச்சினையில் ஏன் தீர்த்து வைக்கவில்லை? எனக்கு வேறு நிறுவனத்திலாவது தொழில் தேடிக் கொடுத்திருக்கலாம். அதையும் செய்யவில்லை

அகதிகளுக்கு வியாபாரக் கடன் வழங்கப்படுகிறது. வீடு கட்டிக் கொள்வதற்கும் கடன் உதவி செய்யப்படுகிறது. இந்த அடிப்படையிலாவது எனக்கு அரசு உதவி செய்தால் நான் சொந்த முயற்சியில் பிழைத்துக் கொள்ள முடியும்.

தங்கள்பத்திரிகை இலங்கை பர்மா போன்ற நடுகளிலிருந்து குடிபெயர்ந்து வருவோரின் இன்னல்களைத் துடைக்கப் பாடுபடுவதாக அறிந்து தங்களுக்கு எனது நிலையை எடுத்துக் கூறி எழுதியுள்ளேன்.

தங்கள் பத்திரிகை வாயிலாக எனக்கு நீதி கிடைக்க ஏற்பாடு செய்யப்படின் நானும் எனது குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் தங்களின் சேவைக்கு வாழ்நாள் முழுவதும் நன்றி மறவாதிருப்போம்

-ரத்தினம் சுப்பையா

தாம்பரம்.

குறிப்பு: இது குறித்து தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியிடம் விளக்கம் கேட்டிருந்தோம் இது பிரசுரமாகும் வரை பதில் எதுவும் கிடைக்கவில்லை.

ஆசிரியர்.

# பயிற்சி பெற முடியவில்லை

நான் இலங்கை - இந்திய உடன்படிக்கையின்படி கடவுச் சீட்டு ஒய். 04 8883) பெற்று 24.9.88 அன்று இந்தியா திரும்பினன். இந்தியா தூதரகத்தின் மறுவாழ்வுத் துறை அதிகாரியின் சிபாரிசின் மூலம் இந்தியாவில் சென்னை அம்பத்தூர் (I.T.I) தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுவதற்கு (24 9 68) அனுமதிக்கப்பட்டேன்.

ஜூலை மாதத்திலே அந்த பயிற்சியின் சேரவேண்டிய நான் இலங்கையில் ஜூலை மாதத்தில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் சேர முடியாது போனதால் செப்டம்பர் மாதத்தில் சேர்ந்தேன்.

முதல் நாள் மட்டுமேபயிற்சியில் சேர்ந்தேன். என்னிடம் பணம்இல்லாத காரணத்தால், உணவுஏனைய சிலவுக்குபணம் இன்றி தொடர்ந்து பயிற்சியை தொடர்வதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை, பயிற்சிநிலையத்தின் தலைவரோ எனக்கு வழங்கப்படும் தொகை ஆறு மாதத்துக்கு பின்னரே கிடைக்கும் என்றும் அது வரை உணவிற்கு சொந்தப்பணத்தைக் கொண்டே சமாளித்துக் கொள்ளவேண்டும்என்று கூறிவிட்டார் இதனால் தொடர்ந்து பயிற்சி பெற முடியாத நிலையில், மறுவாழ்வுத்துறை இயக்குனரை நாடினேன். அவரோ வேறு எந்தவகையிலும் உதவி செய்ய வழி இல்லை என்று கூறிவிட்டார்

பின்னர், தமிழக முதல்வரின் செயலாளரிடம் முறையிட்டதன் பயனாக இப்போது திருச்சி தாயகம் திரும்பியோர் முகாமில் தங்கிஇருக்க அனுமதிக்கிடைத்து தங்கியுள்ளேன்.

தற்போது என் பெற்றோர்களும் வந்துவிட்டாலும் பயிற்சியில் சேர வசதியில்லை

நான் தொடர்ந்து பயிற்சி நிலையத்தில் சேர்ந்து எனது பயிற்சியை தொடர விரும்புகிறேன். ஏதும் வழியுண்டா ?

எஸ்.சந்திரனம்

கொட்டப்பட்டு-திருச்சி

# நாட்டுப் பாடல்கள் கூறும் மலையகத் தமிழர் கதை

உண்ண உணவு உடுக்க உடை, இருக்க இடம் என்ற தேவைகளுக்கு வழியில்லாமல்- வானம் கருக்காது மழைப் பொழியாது பூமி விளையாது வயல்களிலிருந்து அறுத்தடித்து கட்டி மூட்டை மூட்டையாக வீட்டை நிரப்பும் நிலைமைமாறி வறுமைப்பிணியில் தமிழ் நாடு சிக்கித் திணறிய காலமது, சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்—

இதே வேளையில் தான் உலகெல்லாம் ஆதிக்க வெறியில் வெற்றிகொண்டு கொடி கட்டி ஆண்ட ஆங்கிலேயர்கள். இலங்கைத் தீவின் மலைப் பிரதேசங்களின் மண் வளத்தால் மழைவளத்தால் செல்வவளம் பெருக்க துடித்துக் கொண்டிருந்தார்கள். செறிந்த காடுகளை அழித்து மலைகளைத்திருத்தி கோப்பிச் செய்கை செய்ய ஆயத்தமானார்கள்.

காடுகளையழித்துப் பண்படுத்தி கோப்பி பயிர் செய்ய குறைந்த கூலிக்கு வேலை செய்யக் கூடிய தொழிலாளர்கள் தேவைப்பட்டார்கள், அதற்கு தமிழ் நாட்டில் கோரத் தாண்டவமாடிய வரட்சியும் வறுமையும் துணைப் புரிந்தது அதே வேளையில் ஜமீன்களின் கீழ் ஒடுக்கப்பட்டு துன்பமுற்ற ஏழை மக்களின் துயரமும் வழிகோலியது.

அந்த காலக்கட்டத்தியெல்லாம் இந்தியாவில் சுதந்திரப் போர் உக்கிரமாக நடந்ததாலும், தாமே தொழிலாளர்களைத் திரட்ட முடியாதக் காரணத்தாலும் தமிழ் மொழியைப் பேசவும் கேட்டுப் புரிந்து கொள்ள முடியாதக் காரணத்தாலும் ஏஜண்டுகளை வைத்து கூலிக்கு ஆட்களைத் திரட்டத் தொடங்கினார்கள். அந்த ஏஜன்டுகள்தான் "பெரிய கங்காணிகள்" என்று அழைக்கப்பட்டவர்கள். வெள்ளைத் துரைமார்களின் கீழ் பெரிய கங்காணிகள் "ஆள்கட்டும்" தமது வேலையை ஆரம்பித்து வைத்தார்கள்.

இலங்கையைப் பற்றி இங்குள்ளப் பலருக்குத் தெரியாது பெரிய கங்காணிகள் இலங்கையைப் பற்றி இருப்பதையும் இல்லாததையும் கூறி அவர்களை அவர்களின் உள்ளத்தைக் கவர்ந்தனர்.

"குள்ள நரி கொம்பை
... ... ... வைத்துக் கொண்டு
இந்தியாவுக்கு தென் கிழக்கே
இலங்கை என்ற தோர் தேசம்

................................................
................................................

என்று இப்படித்தான் இலங்கைத் தீவை முதன் முதல் அறிமுகம் செய்து வைத்தார்கள்.

சிலருக்கோ சந்தேகம். இந்த இலங்கை மண்ணைப்பற்றி- இலங்கையை எப்படி யெப்படியோ கற்பனை செய்து பார்த்தார்கள் கேள்விகள் எழுப்பி சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள முயன்றனர்.

காற்று மழைகள் அதிகம் உண்டாம்—அங்கே
ஏற்ற இறக்கங்கள் மெத்த உண்டாம்
................................................

இப்படி அங்கு மழையும் காற்றும் கொடுமையாக வீசுகிறதே என்றெல்லாம் கேள்விகளுக்கு மேல் கேள்விகள் எழுப்பி சந்தேகங்களைத் தீர்க்க முயன்றனர்.

"காற்று மழை அதிகமில்லை
ஏற்றம் இறக்கம் மெத்த இல்லை
................................................

❖ ❖ ❖

"வாழைப்பழத்திலே வீடு மெழுகியே
வாசலுக்கு பாக்கு வெற்றியையாம்
ஞப்படிபட்ட இலங்கை சீமையை
கொடுமை சொல்லவும் காரணமாம்"

என்றெல்லாம் கங்காணியார்கள் சாதுரியமாக பதிலளித்தனர்.

இலங்கைக்கு ஆள் கட்டுவதற்காக கங்காணிகள் ஆளாய்ப் பறந்தார்கள்; ஆடி ஓடி ஆள் பிடிக்க முயன்றார்கள்.

கங்காணி ஐயாவே வாருமையா
ஒரு காரியம் சொல்லுறேன் கேளுமையா
சில்லரை கங்காணி சேவகமே நீங்க
சீமைக்குப் போய் வாங்க அக்கரையாய்

அந்த கங்காணிகளைப் பற்றி எல்லாம் அப்போது பேசிய கொண்டார்கள். இலங்கைக்கு ஆள் கட்ட அழைத்துக் கொண்டிருந்த கங்காணிகளைப் பற்றி பல்வேறு அபிப்பிராயங்கள் கொண்டியிருந்தார்கள்.

"கங்காணி ஐயா பயப்படாதே
கப்பல் கடல்கரை வந்து சேரும்
ஆளுங்க அம்புக இல்லாட்டி-துரை
வட்டிகள் வாசிகள் போட்டெடுப்பார்"

ஆள் கட்டிக் கொண்டு போகும்வரை கங்காணிக்கு கவலை தான். கப்பல் ஏறும் வரை லாபநஷ்ட கணக்கு தான். இல்லா

**ராஜு**

விட்டால் அவர்களை அனுப்பும் வெள்ளைத்துரைகள் கொடுத்ததற்கு வட்டியும் வாசிகளும் போட்டு விடுவார்கள்.

"வெள்ளை சட்டை ஒன்று போட்டுக் கொண்டார்
வெள்ளை குஞ்ச மொன்றை வைத்துக் கொண்டார்.
துள்ளுறார் சீமைக்கு ஆள்கட்டிப் போவதற்கு
சோக்கைப் பாரடி தோழிப் பெண்காள்"
"அரை சார் துண்டையும் வாங்கிக் கொண்டார்
அவர் தகரத் துண்டையும் சேப்பில் வைத்தார்
கடல் தாண்டியே சீமைக்கு போவதற்கு
காலத்தைப் பாரடி பெண்டுகளா"

ஆட்களைத் திரட்டுவதற்காக எப்படி எப்படியோ முயன்றார்கள். சீமான்களைப் போல தம்மை அலங்கரித்துக் கொண்டார்கள். தங்களுக்கு பழக்கமில்லாத சட்டையும், கோட்டும் போட்டு அலங்கரித்துக் கொண்டார்கள். எல்லாம்—


"தஞ்சாவூர் முதல் சேலம் வரையும்
கூப்பிட்டழைத்தாராம் பெஞ்சுக்கு காசுக்கு"த்தான்

இலங்கைக்கு போய் விடலாமா என்ற ஆசை பலருக்கு. என்றாலும் அந்த மண்ணைப்பற்றி தப்பான செய்திகள் அச்சத்தை மூட்டின அதனால் சிலர் போவதற்குத் தயங்கினார்கள்.

"கண்டி கிண்டி எண்ணாதேடா-மாமா
கண்டிக்கு நீ போகாதேடா
முத்து விற்கும் கண்டியிலே மாமா
முன் பழக்கம் யாருமில்லை"

அந்த அச்சத்தை ஒருபெண் புலப்படுத்துவதாக அமைகிறது இந்த பாடல். இன்னும்—

(தொடரும்)



## 11

"ஏன்டா ஊரெல்லாம் அத இத சொல்லி என் கவுரவுத்தையும கெடுக்குறாயா? வெளியே தலை காட்டவே வெட்கமா இருக்கிறது" என்று அதையே வைத்து இல்லாத பல்லவியெல்லாம் பாட ஆரம்பித்து விடுவார். இதனாலே ஊரில் கூட யாரிடம் வாயைத்திறக்க முடியவில்லை

ஆளில்லாத காட்டில் விட்டது போன்ற நிலை எனக்கு. பைத்தியம் பிடிக்காத குறை தான்.

இப்போதும் எனக்கு நன்ருக நினைவிருக்கிறது நான். இந்யாவுக்கு வந்து ஆரேழு மாதங்களில் மகிழ்ச்சியடைந்த ஒரு நாள் அது. அதுவே என் துக்கத்தையும் பீடச் செய்தது.

அது—சபீனவின் கடிதம் வந்த நாள் தான்.

நான் இந்தியா வந்து சேர்ந்தவுடன் அவளுக்கும் நண்பர்களுக்கும் வேண்டியவர்களுக்கும் கடிதம் போட்டது தான் அதற்கு பின்னல் நான் யாருக்கும் கடிதம் போடவே இல்லை என்னல் போட முடியவில்லை வந்த கடிதங்களுக்கு கூட நான் எதுவுமே எழுதவில்லை எல்லாவற்றையும மறக்கடிக்கிற அளவுக்கு இந்த ஊர் வாழ்க்கை, என்னை அதளப்பாதாளத்தில் தள்ளி விட்டது.

சபீன கூட கோபப்பட்டு எழுதியிருந்தாள்.

"கடல் கடந்து போனதும் எல்லாவற்றையும் மறந்துப் போய்விட்டீர்களா? இப்படி தான் எல்லோரும் போனதும் மறந்துப்போய் விடுவார்கள் என்பது போல நீங்களும் மறந்து போய் விட்டீர்களா? எப்படி உங்களுக்கு மறக்க முடிந்தது; மறந்திருக்க முடிகிறது—

"நீங்கள் எல்லோரும் போனது இன்னமும் எங்களுக்கு பெரிய குறையாக இருக்கிறது இந்த இடமே வெறிச்சோடி போனது போல இருக்கிறது. எதையோ பறிக்கொடுத்த மாதிரி இருக்கிறது.

'எப்பொழுது உங்கள் நினைவுதான் பிரிந்துபோன வேதனையும் வாட்டுகிறது.

"எப்படியும் அடுத்த ஆண்டு கடைசிக்குள் வந்து விடுவோம் என்று நினைக்கிறேன். அதுவரை மறக்காமல் இருப்பீர்களா?

அடிக்கடி கடிதம் எழுதுங்கள்" -நீண்ட கடிதமே எழுதியிருந்தாள் நீண்ட இடைவெளிக்குப்பின் வந்த அவளது கடிதம் என் துன்பம் துயரத்தை யெல்லாம் எங்கேயோ விரட்டியடித்தது.

துன்பத்திலிருந்தும் துயரத்திலிருந்தும் விடுதலை பெற்ற நெஞ்சில் பழைய நினைவுகள் நீர் பூத்த நெருப்பாக கனக்கின்றது.

என்னல் தாங்கக் கூட முடியவில்லை.

"இனி மேல அது மாதிரி வாழ்வு வருமா?"

குமறிக் குமறிக் அழுதே விட்டேன். என் தங்கைகூட பார்த்து விட்டு கேட்டாள்.

"அண்ண ஏங்கண்ண அழுவுறீங்க"

கேட்கும் போதே அவளும் அழுது விட்டாள்

"ஒன்னும் இல்லேம்மா சிலோன் நினைவு" என்று அந்த கடிதத்தை அவளிடம் கொடுத்தேன்

அவள் அதை பார்த்து விட்டு சொன்னள் "இனி அதை நினைச்சு என்ன ஆகப் போகிறது? நம்ம தலை விதி இப்பிடி ஆயிடுச்சு"

அவளே எனக்கு ஆறுதல் சொன்னள் "அண்ண நீங்களே அதைரியப்பட்டா, எங்களுக்கு யாருண்ண துணை அம்மாவும், அப்பாவும் இனி தேறுவாங்கன்னு சொல்ல முடியாதுண்ண அழாதேயுங்க அண்ண"

அவள் சொன்னதைத் தொடர்ந்து, நமக்கு ஒருவழி பிறக்கும் என்று நான் அமைதியானேன், ஆனல்—

தை பிறந்தால் வழி பிறக்கும் என்றுசொல்வார்கள். தை என்னவோ பிறந்து, எங்களுக்கு வழிதான் பிறக்கவில்லை.

என் மாமா சொன்னபடி நடந்துகொள்ளவில்லை வாங்கிய பணத்தையும் கொடுக்கவில்லை எங்களுக்கு எல்லாம் செய்துக் கொடுப்பதாக சொன்ன எந்த ஏற்பாடுகளை செய்யவில்லை.

ஒரு நாள் பெரிய வாக்குவாதமே எங்களுக்கு வந்துவிட்டது.

"வந்ததும் கொண்டு வந்த பணத்தையெல்லாம் வாங்கிக்கிட்டீங்க, நாங்க வாழ்றது இல்லையா? எத்தனை நாளைக்கு தாங்க இப்படியே உட்காந்திருக்கிறது. அவசர ஆபத்துக்குக் கூட அஞ்சு காசு வாங்கிக்க முடியல்லை நீங்க செய்யுற நல்லால்லை மாமா" என்று பேச வேண்டிய நிலைக்கே வந்து விட்டேன்.

"ஆ... நான் என்னா ஒங்களை மோசம் பண்ணிட்டனா ஊருக்கு வந்ததுமே ஒங்களை விட்டுடாம. வச்சி சோறு போட்டுக்கிட்டு இருக்குறேன்டா. இத யாராளடா செய்யமுடியும்" என்று, ஏதோ எங்களுக்காக பெரிய தியகத்தையே செய்து விட்டது போல ஆரம்பித்தார்.

இலங்கையில் இருக்கும் போது எங்களுக்கு கடிதத்திற்கு மேல் கடிதம் எழுதினர். 'ஊருக்கு வந்து விடுங்கள்' என்று எழுதி எழுதி எங்கள் ஆர்வத்தையும் துடிப்பையும் அதிகப் படுத்தியதில் இவருக்கும் பங்குண்டு அத்துடனேயே நாங்கள் தனியாகவே குடிப் போயிருக்கலாம். அதை தடுத்து தன்னேடு இருத்தியவரும் இவர் தான் 'சோறு போடுவதாக' சொல்கிருர் அதுவும் தன் தங்கையாயிற்றே, தங்கையின் குடும்பமாயிற்றே அக்கரையிலா போடுகிருர். அதுவும் இல்லை. இத்தனை காலமும் எங்கள் நிலத்திலிருந்து கிடைக்கிற குத்தகை நெல்லை அவர்தான் அனுபவிக்கிருர்.

இவர்தான் கேட்கிருர், இதையெல்லாம், யாரால் செய்யமுடியும் என்று. எதையும் சிந்தித்து தான் பேசுகிருரா இல்லை திட்டம் போட்டுதான் . . . புரியவில்லை...

இருந்தும் ஏதோ இனமாக சோறு போடுவது போல அல்லவா பேசுகிருர் எனக்கு பொறுக்க முடியவில்லை. பற்றிக் கொண்டுவந்தது.

"நீங்க என்ன சும்மாவா எங்களுக்கு சோறு போடுறீங்க இத்தனை காலமும் அந்த குத்தகை நெல் எல்லாம் நீங்கதான் வங்கி அனுபவிக்றீங்க, இல்லை நாங்கதான் ஒங்களோடேயே தங்கனும்னு ஆசைப்பட்டோமா, நீங்கதானே இருங்கன்னு இங்க உக்காரவைச்சிங்க கொண்டு வந்த பணத்தையும் வாங்கு மொத்தமா வச்சிக்கிட்டு இல்லாத கதை யெல்லாம் பேசுறீங்க".

அத்தனையையும் வெளிப்படையாகவே பேசிவிட்டேன்.

"என்னடா இல்லாத கதை எல்லாம் பேசறே. தம்பிடி காசுக்குக் கூட எங்கிட்ட கணக்கு இருக்குடா!

சொந்தக்காரர்களில் இரண்டு நபர்களை வைத்துக் கொண்டு ஒரு கணக்கையும் காட்டினர்.

அந்தக் கணக்கு எனக்கு தலை சுற்றியது நாங்கள் வந்ததிலிருந்து கொடுத்த சாப்பாட்டுக் கணக்கு; பிரயாணச் செலவு நாங்கள் இந்தியாவுக்கு வந்ததும், எங்களை

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மண்டபம் கேம்ப் வந்து அழைத்து வந்து சிலவு உட்பட, நோய் நொடி என்று மருந்து, டாக்டர் கணக்கு. அவ்வப்போது வாங்கிய கணக்கு, வருவதற்கு முன்னாலே எங்களுக்காக யார் யாரோ எங்கள் அப்பா வழி உறவினர்களுக்கு செய்த கல்யாண, கருமாதி என்றும்— செய்ததாக கணக்கு என்று பலவாறு காட்டினார்.

சாட்சிக்கு வந்திருந்த சொந்தக்காரர்கள் 'சரி தான்' என்று தலையை ஆட்டினர். அவர்களுக்கு என்ன தெரியும்? தெரிந்தாலும் சொல்ல மாட்டார், நாமக்கேன் வம்பு' என்று அப்படியே சொல்வதென்றாலும் அதனாலே தங்களுக்கு நன்மை உண்டா என்று பார்ப்பார்கள் நியாயம் இருக்கிறதோ, இல்லையோ தங்களுக்கு நன்மை இருக்குமென்றால் வக்காலத்து வாங்க தயாராயிருப்பார்கள் பொதுவாக இவர்களால் எதையும் எதிர்ப்பார்க்க முடியவில்லை. உபசாரத்திற்கு நான்கு வார்த்தை பேசுவர்கள் அதோடு ஒதுங்கிப் பொய் விடுவார்கள்.

காட்டிய கணக்குபோக மீதி பணத்தை விரைவில் தீர்த்து விடுவதாக ஒரு முடிவைச் சொல்லிவிட்டார். அதற்குமேல் என் மாமாவிடம் எதையும் எதிர்பார்க்க முடியாது என்பது தெளிவாகிவிடடது

அதற்கு மேல் நாங்களும் அவரோடு இருக்க விரும்பவில்லை. இருக்க முடியாத அளவிற்கு எங்களுக்குள் வெறுப்பு, கசப்பும் வளர்ந்து விட்டது.

வாடகைக்கு ஒரு வீடு ஏற்பாடு செய்து தனியாக குடியேறினோம்.

இருந்தும் என் மாமாவின் வாய் ஓயவில்லை—

'ம்... நல்லது பண்ணனும்னுதான் இருந்தேன் அதுக்குள்ள மூறிச்சிக்கிட்டான் இவனால இந்த ஊருல என்ன பண்ணிப்புட முடியும் பாக்குறேன் இவனால ஒரு மயிர அசைக்க முடியுமா?'' என்று மற்றவர்களிடம் கரித்து கொட்டிக் கொண்டுதான் இருந்தார். மற்றவர்கள் பேசாவிட்டாலும் தாமே வலியப் பேசிப் பேசி தன் செயல்களுக்கு நியாயம் கற்பித்தார்.

அவரது செயலுக்குத் தகுந்த மாதிரிதான் எங்கள் வாழ்க்கையிலும் அடிமேல் அடிவிழுந்தது.

அதற்குப் பின்னால், ஒரு இரண்டு மாதங்கள் போயிருக்கும்—

எதிர்பாராத வகையில் அப்பா இறந்துப் போய்விட்டார்.

ஒரு நாள் ஜுரத்தில் படுத்தார். கிராமத்திலிருக்கும் டாக்டர் ஒருவரைக் கூட்டிக் கொண்டு வந்து ஊசிப்போட்டோம். மருந்து கொடுத்தோம் ஜுரம் மேலும் கடுமையானதே தவிர குறையவில்லை. திருச்சிக்குக் கொண்டு போய் ஒருடாக்டரிடம் காட்டினோம். அவரும் ஊசிப்போட்டுமருந்தும்எழுதிக் கொடுத்தார்.

ஊருக்கு திரும்பும் போது ஜுரம் தணித்திருந்தது. அன்றைக்கு நன்றாக இருந்தார். மறுநாள் பலழயபடி ஜுரம்கடுமையானது. டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்தையும் மாத்திரையும் தொடர்ந்து கொடுத்தோம்.

பலன்...?,

அதற்கு அடுத்த நாள்—

காலையில் நான் வெளியே போய்,குளித்துவிட்டு வரலாம் என்று வயற்காட்டுப் பக்கம் போயிருந்தேன். பல்லைவிளக்கி கேணியில் குளிக்கலாம் என்று இறங்கி இருப்பேன்,

''அண்ணே அண்ணே...''

பக்கத்து வீட்டுப் பையன் ஓடி வந்தேன்.

கேணியில் நின்றவாறே நிமிர்ந்தேன்,

'என்ன?' என்றுகூட எனக்கு கேட்கத் தைரியம் எழவில்லை.

''உங்க அப்பாவுக்கு ஒரு மாதிரி இருக்குண்ணே. ஒன்ன பாக்குனும்கிறாரம்!' என்று கேணி மேட்டில் நின்றவாறு கத்தினான்.

நான் சட்டைக் கூட போடவில்லை. விழுந்தடித்துக் கொண் ஓடினேன்.

ஆனால், 'ஐயோ உங்க அப்பா மோசம் பண்ணிட்டு போயிட்டாருடா போறவேளையில் ஒன்ன பாக்கனு மூன்னும் ஆசைப்பட்டாருடா'' என்ற என் அம்மாவின் அழுகுரலும் ஒப்பாரியும் தானே என்னைவரவேற்றது.

கடைசி நேரத்தில் அப்பாவின் அந்த ஆசையைக் கூட நிறைவேற்ற என்னால் முடியாமல் போய் விட்டது.

அவர் என்னென்ன ஆசைப் பட்டாரோ, அவரது கடைசி ஆசை என்னவோ சொந்த நிலத்தில் பாடுபட வேண்டுமென்பது தான். 'சீ... எவன் எவன் கிட்டேயோ கைகட்டி சேவகம் செய்கிறதற்கு எங்காவது ரோட்டுல துண்டப் போட்டு பிச்சை எடுக்கலாம்' என்று அங்கே-தோட்டத்தில் சில சில நேரங்களில் சலிப்டைந்து போகும் அப்பா என்னென்ன கனவுகளெல்லாம் கண்டிருப்பார் வந்தவுடனேயே கொண்டு வந்த பணத்தில் கரண்ட் இழுத்து பம்பு செட் போட்டு விடவேண்டும்: தானே விவசாயம் பண்ண வேண்டுமென்ற திட்டமெல்லாம் போட்டார். ஆனால் ஒரு நாள் கூட சொந்த மண்ணில் ஆசையோடு - உரிமையோடு நின்று பார்க்கக் அவருக்குக் கொடுத்து வைக்கவில்லை,

அந்த வருடம் குத்தகைக் காரர் வயலைவிடுவதற்குள்ளாகவே என் அப்பா போய்விட்டார்.

நாங்கள் நொந்துப் போயிருந்த அந்த வேளையிலும், எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்க்கிற மாதிரி மாமா விவகாரம் பேசத்தயங்கவில்லை—

''எல்லாத்துக்கும் இவன் தான் காரணம். நல்ல மனுசன் வீணா கொன்னுட்டான். என்னோட இருந்திருந்தா அவர் சாக விட்டிருக்க மாட்டேன்'' என்று என்னை குற்றம் சாட்டுவதுபோல அடுத்தவரிடம் சுயபிரதாபம் பேசவும் தயங்கவில்லை.

உதவிகளுக்குவழியே இல்லை ஆனால் உபத்திரவங்களுக் கோகுறைவே இருக்கவில்லை.

ஏன் தான் விடிகிறதோ?என்று நான் ஒவ்வொரு நாளும் படுக்கையை விட்டு எழும் போது இருக்கும். துன்பநினைவுகளோடே எழ வேண்டி இருந்தது தூக்கத்தைக் கலைப்பதே துன்பத்தையும், துயரத்தையும் கலந்து ஒலிக்கிற சோகக்குரல் தான்—

தூரத்திலிருக்கும் வயல்களில், ஏற்றம் இரைக்கும் உழவர்கள் பாடுபட்டு கேணியிலிருந்து நீரை இழுத்து வெளியே இறைக்கிற பரிகள் இத்தனை இத்தனை என்று எண்ணி எண்ணிப் பாடும் அந்த ஏற்றப்பாடல் தான்

அந்த பாட்டு எனக்கு சோகமாக இருக்கும் எல்லாவற்றையும் இழந்து பறி கொடுத்து நிற்கும் தவிப்பைக் கிளப்பும் அந்த பாட்டெழுப்பும் சோகத்திற்கு தகுந்த மாதிரி அந்த ஏற்றத்துக்கும் பெயர் கவலை ஏற்றம் தான்-

அந்த கிளர்ச்சி மிகுந்த நினைவுகளோடு அந்த அதிகால வேளையில் எழுந்து வயலுக்கு நடையைக் கட்டுவேன்.

அந்த வேளையில் வயலுக்கு போனால்தான், ஏற்றம் இறைத்துக் கொண்டிருக்கும் 'வாரக்கார'னோடு நின்றால் தான். உரியவன் இல்லாவிட்டால் ஒரு மூழம் கட்டை! என்று சொல்லுகிற மாதிரி வைத்த பயிரை காப்பாற்ற முடியும், களை வெட்டி, எருப்போட்டு, மருந்தடித்தும் காப்பாற்ற முடியும் விளைச்சலையும் பார்த்து வீடு சேர்க்க முடியும்

வாரக்காரன் இறைக்க,நான் வயலின் ஒவ்வொரு 'குண்டா'க பார்த்து தண்ணீர் காட்டுவேன்.

சொந்த வயலில் பாடுபட வேண்டும் என்று என்னப்பா பட்ட ஆசையை நான் நிறைவேற்றத் தொடங்கினேன்—

(தொடரும்)

# ஸ்தாபன திரட்சியற்ற தொழிலாளர்கள்

ஸ்தாபன திரட்சியற்ற தொழிலாளர்கள் என்பவர்கள் தமிழகத்து சமுதாயத்தின் அடித்தட்டில் வாழ்ந்துவரும் பாட்டாளிகளாவார்கள். நாட்டிலுள்ள உழைக்கும் மக்களின் சரிபாதி உழைப்பாளிகள் நாள் முழுவதும் வியர்வை சொட்ட கடினமாக உழைத்துவிட்டு எண்ணிக்கையில் கணிசமாக இருந்தும், கூட்டாகத் திரண்டு பேரம் பேசும் ஸ்தாபன வலுக்குறைந்தவர்களாக இருப்பவர்கள். இவர்களுடைய உழைப்புக்கு குறைந்த கூலி கொடுத்து கொள்ளை லாபத்தை சுரண்டல் கூட்டம் அடைகிறது. தொழில்களின் ஆண்டறிக்கை 1977 78ன் படி உற்பத்திப் பொருட்களின் மதிப்புயர்வில் இக்கடின உழைப்பாளிகளின் சம்பாத்திய பங்கு 41. இருந்து 1978-79ல் 34 ஆகக் குறைந்துள்ளது என்று புள்ளி விவரம் சொல்கிறது. இதுவே இக்கடின உழைப்பாளிகளைச் சுரண்டுவதின் தீவிரத்தன்மையையும், மோசமான ஊதிய நிலைமையையும் எடுத்துக் காட்டப் போதுமானது.

1977 78ம் ஆண்டு அகில இந்திய நுகர்பொருள் குறியீட்டு சராசரி எண் 324க்கு வறுமைக் கோட்டின் நபர்வருமானம் மாதம் கிராமப்புறத்தில் 2,400 கெலோரி ஊட்டசக்தி பெற ரூ.65 என்றும் நகர்ப்புறத்தில் 2,100 கெலோரி ஊட்ட சக்தி பெற ரூ. 75 என்றும் பாராளுமன்றத்தில் 1980 டிசம்பரில் அரசு அறிவித்தது. அதன்படி 4 பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு (அவர், அவர் மனைவி. இரு குழந்தைகள்) வறுமைக்கோட்டின் வருமானம் மாதம் கிராமப் புறத்தில் ரூ. 195ம். நகர்ப்புறத்தில் ரூ. 225 ம் கிடைக்க வேண்டும். ஆனால் 1977-78ல் தமிழ் நாட்டின் ஜனத் தொகையில் 237.06 லட்சம் பேர்கள் வறுமைக்கோட்டின் கீழ் அதாவது 52.12 சதவிகிதத்தினர் வாழ்கின்றனர் என்று அரசு தெரிவித்தது.

ஜூன் 1983ல் நுகர்பொருள் குறியீட்டு எண் 578 ஆக உயர்ந்துள்ள நிலையில் வருமானம் கிராமப்புறத்தில் ரூ. 116ம், நகர்ப்புறத்தில் ரூ. 133ம் ஆகிறது, அதன்படி 4 பேர் கொண்ட ஒரு குடும்பம் வறுமைக்கோட்டின் வருவாய் கிராமப்புறத்தில் ரூ 348ம் நகர்ப்புறத்தில் ரூ 399 ஆக இருக்க வேண்டுமென்பது நடைமுறையில் ஏற்படவில்லை ஆதலால் தமிழகத்தில் தற்போது வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றவர்களின் எண்ணிக்கை 65 சதவிகிதமாக உயர்ந்துள்ளது என புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

தமிழ் நாட்டில் 1948-ம் ஆண்டு குறைந்தபட்ச கூலிச் சட்டத்தின் கீழ் 43 தொழில்களைக் குறிப்பிட்டு, அத்தொழில்களில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு அரசு குறைந்த பட்சக் கூலியை நிர்ணயம் செய்து வருகிறது, இது மட்டுமல்லாமல் லட்சக்கணக்கான ஸ்தாபன திரட்சியற்ற தொழிலாளர்கள் இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படாமல் இருக்கிறார்கள். சுரண்டலை ஒழிப்பதற்கென்று குறைந்தபட்சக் கூலிச்சட்டம் 1948ல் செய்யப்பட்டு 35 ஆண்டுகள் ஆனாலும் அரசின் மெத்தனக் கொள்கைகளால் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது.

## தமிழக அரசினால் குறைந்தபட்ச கூலி சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட தொழில்கள் 43

1. விவசாயத் தொழிலாளி
2. ஆட்டோமோமைல் பணிமனை
3. சாயப்பட்டரை
4. செங்கல் ஓடு
5. தேயிலைத் தொழில்
6. முந்திரி தொழில்
7. சினிமா தொழில்
8. கயிறு தொழில்
9. காப்பி தொழில்
10. கட்டிடம் சாலை மராமத்து
11. காட்டன் ஜின்னிங் பிரஸ்ஸிங்
12. காட்டன் வேஸ்டு
13. தங்கநகை தயாரித்தல்
14. பட்டு, கைத்தறி
15. கைத்தறி
16. ஆஸ்பத்திரி நர்சிங் ஹோம்
17. பனியன் இதரபின்னல்
18. ஓட்டல்
19. லாண்டரி-துணி துவைத்தல்
20. சுமை தூக்குதல்
21. தீப்பெட்டி-பட்டாசு
22. ஸ்தல ஸ்தாபனம்
23. மைகா
24. சினிமா தயாரிப்பு
25. ஆயில் மில்
26. தோட்டத்தொழில்
27. விசைத்தறி
28. அச்சு
29. அரிசி, மாவு, பருப்பு மில்கள்
30. ஜவ்வரசி
32. உப்பளம்
33. வாசனை வாய்
34. கடைகள்-வியாபார நிறுவனம்
35. சோப்பு
36. மூக்குப் பொடி
37. கல் உடைத்தல்
38. செயற்கை வைரக்கல் தயாரித்தல்
39. தையற்தொழில்
40. தோல் பதனிடுதல்-
41. மரத்தொழில்
42. பீடி, சுருட்டு, புகையிலை
43. உல்லன், கம்பளம்-போர்வை

குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்தலும், அமுலாக்குதலும், அரசாங்கத்தின் சமுதாயக்கடமை என்பது அரசியல் அமைப்பு சட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் விவசாயம், தொழிலாளர்களுக்கும் வேலை வாழ்வதற்குரிய ஊதியம் ஒரு மதிப்பான வாழ்க்கைத் தரத்தை உறுதிப்படுத்தக் கூடிய வேலை நிலைமை ஆகியவற்றை அளிப்பதற்கு அரசு பாடுபட வேண்டும் என்றும் அரசியலமைப்புச் சட்டம் கூறுகின்றது. இதனடிப்படையில் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்கான விதிமுறைகளை அதனை அமுலாக்குவதற்கான நடைமுறைகளையும் காண வேண்டும்.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் கன்வென்ஷன் 13-ன் படி குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்க காட்டிய வழிமுறைகள்:

1. தொழிலாளர்களின் மற்றும் அவரது குடும்பத் தேவையை, நாட்டில் பொதுவாகவுள்ள ஊதிய மட்டத்தையும் விலைவாசியையும், சமூக பாதுகாப்பு நன்மைகளையும், இதர சமூகப் பிரிவுகளின் வாழ்க்கை வசதிகளையும் கருத்தில் கொண்டும்.

2. பொருளாதார வளர்ச்சித் தேவைகளையும், உற்பத்தி திறனின் மட்டத்தையும், வேலைபாடு உயர்ந்த அளவை அடையவும் பராமரிக்கவும் விரும்பும் விதத்தில் பொருளாதார மெய்ப்பாடுகளைக் கவனத்தில் கொண்டும் அடிப்படைகளை உருவாக்க வேண்டும். ○

# தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கி

**(வரையறுக்கப்பட்டது)**

**(ஒரு மத்திய அரசின் நிறுவனம்)**

**144, கிரீம்ஸ் சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600 006.**

ந. க. எண். 3354 / 84 ஜி 1

நாள் : 9-5-1984

## தேர்தல் அறிவிப்பு

இவ்வங்கியில் பிரதிநிதிகளின் பேரவைக்கு சார்பாளர்கள் (டெலிகேட்டுகள்) தேர்தலை 20-8-1984 அன்று நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அங்கத்தினர்களின் தகவலுக்கு தேர்தல் திட்டம் கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | தேர்தல் அலுவலர்களால், தேர்தல் அறிக்கை குறிப்பிடப்படும் நாள் | — | 20.6.1984 |
| 2. | நியமன பத்திரங்கள் தாக்கல் செய்வதற்கு கடைசி நாள் | — | 6.7 1984 |
| 3 | நியமனப்பத்திரங்கள் பார்வையிடுதல் மற்றும் செல்லக் கூடிய நியமனப் பத்திரங்களின் பட்டியல் அறிவிக்கும் நாள் | — | 7-7-1984 |
| 4. | நியமனப்பத்திரங்களை வாபஸ் பெறுவதற்கும் மற்றும் செல்லக்கூடிய நியமனப் பத்திரங்களின் இறுதிப் பட்டியல் அறிவிக்கப்படும் நாள் | — | 16-7 1984 |
| 5. | தேர்தல் நடத்தும் நாள் மற்றும் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் நாள் | — | 20-8-1984 |

இவ்வங்கியிலிருந்தோ அல்லது இவ்வங்கியின் உத்திரவாதத்தின் பேரிலோ பெறப்பட்ட கடனில் 21-5 84 தேதியன்று தவணை கடந்த பாக்கியில்லாமலிருக்கும் அங்கத்தினர்களுக்கும் பங்குத்தொகை செலுத்துவதில் கேட்புத் தொகைகளை செலுத்துவதில் தவறுதலர்களுக்கு மட்டுமே வாக்குரிமை உண்டு. எனினும் 21—5—1984 அன்று தவணை கடந்த கடன் பாக்கியையும் கேட்புத் தொகைகளின் நிலுவையினையும் இவ்வங்கியில் செலுத்துவதற்கு 20—6—1984 பிற்பகல் வரை அவகாசம் நீடித்துக் கொடுக்கப்படுகின்றது. நீடிப்பு அவகாச சலுகையினை எல்லா அங்கத்தினர்களும் பயன்படுத்திக் கொண்டு தவணை கடந்த கடன் பாக்கி, கேட்புத்தொகை பாக்கி ஆகியவற்றை உடனடியாக செலுத்தி தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டப் படுகிறது. அங்கத்தினர்களின் தவணை கடந்த மற்றும் கேட்புத்தொகை பாக்கி பற்றிய விபரங்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு இவ்வங்கியின் வளர்ச்சி அலுவலர்களிடம் கிடைக்கும்.

| | | |
|---|---|---|
| 1. | தமிழ்நாட்டில் சென்னை நகரம், செங்கற்பட்டு, வடாற்காடு தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களிலும் மற்றும் ஆந்திரா, கர்நாடகா மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களிலும் வசிக்கும் அல்லது வியாபாரம் செய்யும் அங்கத்தினர்கள். | தலைமை வளர்ச்சி அலுவலர்<br>தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி<br>மற்றும் வளர்ச்சி வங்கி,<br>144, கிரீம்ஸ் சாலை<br>சென்னை – 600 006. |
| 2. | தமிழ்நாட்டில் சேலம், தர்மபுரி, பெரியார், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் வசிக்கும் அல்லது வியாபாரம் செய்யும் அங்கத்தினர்கள் | வளர்ச்சி அலுவலர்<br>தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி<br>மற்றும் வளர்ச்சி வங்கி<br>8/8 சி, காட்டூர் தெரு பாப்பநாயக்கன் பாளையம், கோயம்புத்தூர்-641 037 |
| 3. | தமிழ்நாட்டில் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் வசிக்கும் அல்லது வியாபாரம் செய்யும் அங்கத்தினர்கள் | வளர்ச்சி அலுவலர்,<br>தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி<br>மற்றும் வளர்ச்சி வங்கி<br>47/1, முதல் மாடி, பயணியர் விடுதி சாலை,<br>அரசரடி, மதுரை—625 010 |
| 4. | தமிழ் நாட்டில் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் வசிக்கும் அல்லது வியாபாரம் செய்யும் அங்கத்தினர்கள் | வளர்ச்சி அலுவலர்,<br>தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி<br>மற்றும் வளர்ச்சி வங்கி<br>75, நடுத்தெரு வார்டு எண் 10<br>ராமேஸ்வரம் |

இவ்வங்கியின் செயல் எல்லையில் உள்ள மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் தேர்தல் நடத்த குறித்த நேரம், இடம் ஆகிய விவரங்கள் சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரிகளால் வட்டாட்சியர் அலுவலகம் / கோட்டாட்சியர் அலுவலகம் / பஞ்சாயத்து யூனியன் ஆணையர் அலுவலகம் ஆகிய இடங்களில் பின்னர் தனியாக அறிவிக்கப்படும்.

ஏ. எம். சுந்தரராஜ், இ. ஆ. ப,
நிர்வாக இயக்குநர்




## பெண்கள் உயர்வுக்காக பாடுபட வேண்டும்!

'மக்கள் மறு வாழ்வு' மகத்தான சேவை செய்து வருவது குறித்து பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியவர்கள் இந்த நாட்டிற்கு வந்த பின்னர், அவர்கள் அனுபவிக்கும் இன்னல்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

இந்தியாவிலிருந்து ஒரு சமுதாயம் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இலங்கை சென்றது நாட்டை வளமாக்கியது. வாழ்வு தந்தது ஆனால் அந்த நாட்டில் வாழ்வதற்கு அச்சமுதாயத்தில் உருவான பரம்பரைக்கு உரிமையில்லாது போய் விட்டது! எத்துணை வேதனை?

இந்தியாவையே தாயகமாய் கொண்டவர்கள். தாயகம் திரும்பினார்கள். இவர்கள்யார்? பெற்றோர்கள் மூலமாக இந்திய நாட்டைப்பற்றி கூறக் கேட்டவர்கள் தானே. எனவே புதிய தொரு நாட்டில் புதிய தொரு வாழ்க்கையினை அமைத்துக் கொள்ள முன்வந்தவர்கள்

ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கிக் கொள்ள முனைந்திருக்கிறார்கள் இச்சமுதாயத்தில் வாழ்கின்ற பெண்களை பார்க்கும் போது பெரும் வேதனையாக இருக்கிறது இலங்கையில் வாழ்ந்தபோது உழைத்துக் கொடுத்தால் போதும் என்ற நிலையில் வாழ்ந்தார்கள், கல்வி அறிவைப்பற்றி சிந்திக்க தவறியவர்கள், வயது வந்த ஆண், பெண் யாவருக்கும் தேயிலை ரப்பர் தோட்டங்களில் வேலை வழங்கிவந்தார்கள். அவர்கள் உழைத்தார்கள், ஊதியம் பெற்றார்கள். ஆனால் அவர்களின் அறிவு வளர்ச்சிக்காக அவர்கள் செய்து கொண்ட முயற்சி பூஜ்யமே!

தோட்டங்களில் உழைத்து உழைத்தே ஓடாய்ப் போய் இந்த நாட்டில் காலடி வைத்திருக்கிறார்கள். இங்கு வந்த பின்னர் கூட அவர்களின் கல்வி கற்கும் ஆற்றல் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை பார்க்கும்போது வேதனை தான் மிஞ்சுகிறது. நமது அரசு, கல்வி வளர்ச்சிக் கென எவ்வளவு வசதிகளை வாய்ப்புகளை செய்து கொடுத்துள்ளது. அதனை நாம் ஏன் பயன் படுத்திக் கொள்ள முடியவில்லை?

இதனை அறியாமை என்று செல்ல முடியாது. அந்த அளவிற்கு அவர்களது மன நிலை மாறி விட்டது தான் காரணம் 'இனி படித்து என்ன செய்யப் போகிறோம்? என்ற ஓர் உணர்வு. எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் அவர்கள் கொண்டுள்ள ஒரு விரக்தி மனப்பான்மை.

'மக்கள் மறுவாழ்வு' தாயகம் திரும்பியோர் நலனில் கொண்டுள்ள அக்கறையை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது

மக்கள் மறுவாழ்வு, தாயகம் திரும்பிய பெண்களின் உயர்வுக்கென, பெண்களுக்காக ஒரு பக்கம் ஒதுக்கினால், பெண்களின் வளர்ச்சிக்காகவும், அவர்களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்களின் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து அவ்வப்போது ஆலோசனை வழங்க வாய்ப்பாக அமையும்,

**சரோஜினி தனகோபால்**
பவானி சாகர்

# பத்தாயிரம் பேருக்கு ஆந்திரத்தில் மறுவாழ்வு

இலங்கையிலிருந்து வரும் 10000 பேருக்கு மறுவாழ்வுப் பணியை மேற்கொள்ள ஆந்திர அரசு ஒப்புக்கொண்டிருப்பதாக, பத்திரிகை செய்தியொன்று கூறுகிறது

முன்னாள் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்தும் (வங்காள தேசம்), பர்மாவிலிருந்தும் வருவோர் நின்றுவிட்ட நிலைமையில் இங்கு இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் வரும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவர்கள் தமிழ் வம்சாவழியைச் சேர்ந்தவர்கள் என்றபோதிலும் அவர்களனைவரையும் குடியமர்த்துவது தமிழ்நாடு அரசுக்கு சிரமமாயிருக்கிறது. இப்போது மறுவாழ்வு பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 804.75 கோடி தொகையில் ரூ 172 கோடி இலங்கையிலிருந்து வருவோருக்கே செலவிடப்படும்.

சித்தூர் அனந்தப்பூர், நெல்லூர், பிரகாசம், குண்டூர், கிழக்கு கோதாவரி, கரீம்நகர் மாவட்டங்களில் இலங்கையிலிருந்து வந்தோருக்காக விடுதிகள் கட்ட ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. ரங்கா ரெட்டி அல்லது மேடக் மாவட்டத்தில் விடுதிகள் கட்டுவதற்காக மேலும் ரூ. 28 லட்சம் ஒதுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையிலிருந்து வந்த 100 பேரை எடுத்துக் கொள்வதற்காக தெவங்கானு எபின்னிங்மில், பிரிம் ஸ்டோன் ரப்பர் புராடக்ட்ஸ் நிறுவனங்களுக்கு தலா ரூ. 10 லட்சமும் அது போல 50 பேரை எடுத்துக் கொள்ள கோதாவரி ரப்பர் இண்டஸ்ட்ரீஸுக்கு ரூ. 11 லட்சமும் வழங்கப் பட்டன. பட்டுத்தொழில் துறையில் 180 பேரை எடுத்துக் கொள்ள ரூ, 26 லட்சம் அளிக்கப்பட்டது. ○

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

றில் தங்க வைத்தார்களாம்–கிருமிகள் தொல்லை தானும் அந்த கொட்டடியைக் சுற்றி காடுகள் தானும் மனித நடமாட்டமே இல்லையாம், பாம்புகள் விஷப்பூச்சிகள் தான் வாழ்கின்றனவாம்.

தோட்ட சொந்தக்காரர்கள் சொன்னது போல அங்கே தேயிலைத் தோட்டமும் இல்லை, ஆட்கள் எவரும் வேலை செய்யவும் வில்லையாம் இனிதான் காடுகள் அழித்து பயிரிட வேண்டுமாம். அதற்கு ஐந்து ஏக்கர் நிலம் தான் வைத்திருக்கிறார்களாம்.

உணவுப்பொருட்கள் வாங்குவதென்றாலும் 6, 7 மைல் சென்று திரும்ப வேண்டுமாம் கடை கண்ணி, பள்ளி, வைத்திய வசதி எதுவும் இல்லாத நிலையில் அங்கு இருக்க பிடிக்காது திரும்பி விட்டனராம்.

முகாமில் சேர்க்க மறுக்கப் பட்டதைத் தொடர்ந்து, நடைபாதைகளிலும், ரயில்வே ஸ்டேஷனிலும் தங்கி இருக்கின்றனராம்.

அவர்களது பாஸ்போர்ட்கள் எல்லாம் சம்பந்தப்பட்ட தோட்ட முதலாளியிடமே சிக்கிக்கொண்டதாம் அது மட்டுமல்ல செல்லும் போது இராமசாமி என்னும் நபரின் பெயரிலேயே தமது சாமான்களை லக்கேஜ் செய்துக் கொண்டு சென்றனராம் இப்போது அந்த லக்கேஜ் எல்லாம் சென்ற இடத்தில் ரயில்வே ஸ்டேஷனில் கிடக்கிறதாம் அந்த நபர் எங்கோ சென்றதால் அவற்றையும் பெறமுடியாதிருக்கிறதாம்? ○

Editor & Publisher: T. S. RAJU, Cangaiamman Kovil Street, Madras 600 004. Printer: L. S Srinivasan at Jai Kalidas Press, 29, B. E. Colony, 4th Street, Madras-600024.

# கண்டியில் பரிந்துரைத்தது ஒன்று ! இங்கு செய்வதோ வேறொன்று !!

"கண்டியிலுள்ள இந்திய தூதுவரகத்திலுள்ள மறுவாழ்வுத்துறை அதிகாரிகள் சொல்வதொன்று, இங்கே செய்வதோ வேறு" என்று இலங்கையிலிருந்து குடிப்பெயர்ந்து அகதிகள் முகாமில் தங்கியுள்ள ஒருவர் நமது நிருபரிடம் வருத்தத்துடன் தெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நான் இலங்கையில் ஓட்டுநராக வேலை செய்தேன். இலங்கை திரும்பும் போது கண்டி தூதுவரக, மறுவாழ்வு பகுதியில் மறுவாழ்வுக்காக விண்ணப்பம் செய்தேன். அப்போது எனது லைசன்ஸை மாற்றி—இன்டர் நேஷனல் லைசன்ஸாக மாற்றி வரவேண்டும்: மாற்றி வந்தால் தான் சம்பந்தப்பட்ட வேலை வாய்ப்புக்கு சிபார்சு செய்யப்படும் என்று கூறிவிட்டார்கள் அப்படியே ஒரு அறிவிப்பு பலகையும் அங்கே எழுதி வைக்கப்பட்டிருக்கிறது.

அதன்படி நான் ரூபா 800க்கு மேல் சிலவு செய்து இன்டர் தேசனல் லைசன்ஸ் பெற்று, ஓட்டுநர் வேலைக்கு பரிந்துரைக்கப்பட்டு வந்தேன்.

இங்கு வந்தாலோ அந்த லைசென்ஸ் செல்லுபடியாகாது. இங்கு புதிதாக லைசன்ஸ் வாங்க வேண்டும் என்று கூறிவிட்டார்கள்.

உடன் பயன்படுத்தி வந்த ஒரிஜினல் லைசன்ஸை மாற்ற ஏற்பாடு செய்தேன், இதை மாற்றத்தான் எவ்வளவு தொல்லைகள் அது சிங்களத்தில் இருப்பதால் உரிய சான்றிதழ் வழங்க வேண்டும் இதற்கு யாரைத்தான் பிடிக்கமுடியும். அதுமட்டுமல்ல புதியலைசன்ஸ் வாங்க புதிதாகவே வண்டி ஓட்டிக் காட்டப்படவேண்டும் அதற்காக நாமே வண்டி வேறு பிடிக்க வேண்டும் இதற்கெல்லாம் நூற்றுக் கணக்கான ரூபாய் சிலவு செய்ய வேண்டியுள்ளது.

இதுபோன்ற காரியங்களுக்காக பல நாட்கள் அலைய வேண்டியுள்ளது அலைந்து பணம் செலவு செய்தாலோ அதுவும் பயன்படாமல் போய் விடுகிறது

அதனால் இலங்கையில் கண்டி தூதுவரகத்தில் மறுவாழ்வு உதவிகள் பரிந்துரைக்கும்போது முறையாக பரித்துரை செய்யப்பட வேண்டும் என்பதோடு, சிபார்சுப்படி இங்குள்ள அதிகாரிகள் செய்ய முயல வேண்டும்" என்றார். மேலும்,

இதையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது. கண்டியில் சிபார்சு செய்யப்படும் உதவி பிடிக்க வில்லை என்று மாற்று உதவிக்கேட்டால் மறுத்து விடுகின்றனர் கண்டியில் எழுதியது தான் தலை எழுத்து என்கின்றனர், ஆனால், அங்கு சிபார்சு செய்யப்படுவது இங்கு கொடுக்க முடியவில்லை என்றால், வேறு வேலை கொடுக்கின்றனர் அதை மறுத்து கண்டியில் எழுதிய வேலையே கொடுங்கள் என்றால் அப்படியெல்லாம் கொடுக்க முடியாது அது எங்கள் இஷ்டம் நாங்கள் கொடுப்பதை பெற்றுக் கொள் இல்லா விட்டால் எதுவும் இல்லை என்று விரட்டுகிறார்கள்" என்றும் ஒருவர் தெரிவித்தார்.

# கர்னாடகம் சென்றவர்கள் தமிழ்நாடு திரும்பினர் !

மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்புப் பெற்று கர்னாடகம் மாநிலம் சென்ற இலங்கையில் இருந்து குடிப்பெயர்ந்த சுமார் 18 குடும்பங்கள் மீண்டும் அகதிகள் முகாமிக்கே திரும்பியதாக குடிப்பெயர்ந்தோர் மத்தியில் பணி செய்யும் அமைப்பின் பணியாளர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி வேலை வாய்ப்பளிக்கும் திட்டத்தின் கீழ் கர்னாடகம் மாநிலத்தைச் சேர்ந்த தேயிலைத் தோட்டத்திற்கென 18 குடும்பங்கள் அழைத்துக் செல்லப்பட்டனவாம். கர்னாடக மாநிலத்திலுள்ள ஹசன் மாவட்டத்திலுள்ள இஸ்கூல்மடம் என்ற இடத்திற்கு 5 குடும்பங்களும், சக்கீஸ்புரம் என்ற இடத்திற்கு 13 குடும்பங்கள் அழைத்துக் செல்லப்பட்டிருக்கிறார்கள்

வேலைக்குக் சென்ற சில தினங்களிலேயே அந்த குடும்பங்கள் திருப்பிவிட்டன.

50க்கு மேற்பட்டவர்கள் வேலை செய்யும் 500க்கு மேற்பட்ட ஏக்கருடைய தேயிலைத் தோட்டத்திற்கு என்று அழைத்துச் செல்லப்பட்டதாம் அங்கே குடியிருப்பு வசதிகள், மருத்துவ வசதிகள், பள்ளிக்கூட வசதிகள் எல்லாம் இருக்கின்றனவென்று இராமேஸ்வரத்திலேயே தோட்ட சொந்தக்காரர்கள் தெரிவித்தார்களாம்.

ஆனால் அங்கே கொண்டு சென்று மாடுகள், கோழிகள் அடைக்கும் கொட்டடியொன்

(7-ம் பக்கம் பார்க்க)

Regd. No. TN/MS (C) 702

மக்கள் மறுவாழ்வு

தொடர்பு கொள்ள :

1, தெற்கு கங்கையம்மன் கோயில்
2வது தெரு,
சென்னை-600094